## உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியம் - 2014

---

உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 நிதிசார்முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்தஅறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப்படி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்நிதியத்திற்காக வருமானக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீடமைப்பு நலனுக்கான திட்ட முறைமையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் அறவீடுகளைப் பதிவு செய்வதற்காக பேரேட்டுக் கணக்குகள் பயன்படுத்தப்படாமல் இருந்தமையால் அச்செயற்பாட்டின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) வீடமைப்பு நலன்திட்ட நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மீதியான ரூபா 15,999,726 தொகை மற்றும் அதற்காக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தின் மீதி ரூபா 15,020,495 ஆன கூட்டுத்தொகை வீடமைப்பு நலன் நிதியமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கடன்பட்டோர் மீதி, காசு மற்றும் அதற்கு சமமானவைகளாக கருதப்பட்டிருந்தது.

### 2.3 ஊக்குவிப்பு நிதியத்தை மீள் செயற்படுத்துதல்

2006 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவின் போது செலவினத் தலைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புப் படி நிதியம் மீளாய்வாண்டின் போது செயற்படாத நிதியமாக இருந்தது. அதனால் ஊக்குவிப்பு நிதியத்தின் கீழ் காணப்படுகின்ற ரூபா 5,361,329 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களிலிருந்து ரூபா 5,109,075 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், நிதியத்தின் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாத ரூபா 252,255 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்களை திணைக்களத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் அந்நிதியத்தை மீள செயற்படுத்துவதற்காக திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் அந்நிதியத்தை செயற்படுத்துவதற்கு 2014 ஒக்தோபர் 13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரியின் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வீடமைப்பு நலன்திட்ட முறைமைக்கான கடன் நிர்வாகம்

(ஆ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்